# சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும் (பாகம் - 12)

( சட்டத்தரணி கனக நமநாதன் LL.B.)

இலங்கை வான்பரப்பில் இந்திய விமானங்கள் அத்துமீறியதும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலிருந்த படை முகாமை அழித்ததும் தற்கொலைப் படையணியொன்று புதிதாக புலிகளால் உருவாக்கப்பட்டிருப்பதும் இலங்கை அரசை தீவிரமாக சிந்திக்க வைத்தது. தற்கொலைப் படையணி உருவாக்கம் இராணுவம் எதிர்கொள்ள முடியாத ஒரு தர்மசங்கடமான நிலைமைக்கு இலங்கை அரசைத் தள்ளிவிட்டது. அதனால் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு இந்தியாவின் சமரசத்தில் ஏற்படுத்த இலங்கை அரசு உள்ளூராக விரும்பியது.

**இந்தியாவுக்கிருந்த கரிசணை**

ஏற்கெனவே திம்பு பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராக செயற்பட்டு எதுவும் தீர்வாக எட்டப்படாத நிமையில் இலங்கையில் உள்நாட்டுப்போர் நீடித்தால் அது இந்தியாவுக்கு எதிரான பிறசக்திகள் இலங்கையில் ஊடுருவித் தங்கள் நாட்டுக்கும் பாதுகாப்பற்ற நிலைமையை உருவாக்கலாம் என்ற அச்சமும் இந்தியாவுக்கு இருந்தது. அதனைவிட பல காரணங்களால் இலங்கைத் தமிழர் பிரச்சினைத் தீர்வில் இந்தியா மிகவும் நெருங்கிச் செயற்பட முன்வந்ததை அவதானித்திருக்கலாம். அதில் மிகவும் முக்கியமானது தமிழ்நாட்டில் வாழும் தமிழ் மக்களின் மன உணர்வுகளை மதிக்க வேண்டிய கட்டாயம். தமிழ் நாட்டில் கட்சிபேதமின்றி சகலரும் இலங்கைத் தமிழருக்கு முழு ஆதரவையும் அளித்து வந்ததுமன்றி பல சந்தர்ப்பங்களில் தீக்குளித்து தங்கள் இன்னுயிர்களை தியாகம் செய்த நிகழ்வுகளையும் இங்கு நினைவு கூர்ந்து பதிவு செய்ய வேண்டியுள்ளது. யுத்தம் காரணமாக இந்தியாவுக்குள் அகதிகளாக புகும் இலங்கைத் தமிழர்களை ஆதரித்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் இந்தியாவுக்கு இருந்தது. கறுப்பு ஜூலைக்கு பின்னர் தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கும் புகலிடம் கொடுத்து அணுசரிக்க வேண்டிய தேவைப்பாடும் இருந்தது. இவ்வாறு பற்பலவிதமான பொறுப்புக்களை இந்தியா ஏற்று நிதானமாகச் செயற்பட்டது. அந்தப்போக்கு இந்தியா எப்போதும் எமக்கு உறுதுணையாக இருக்கும் என்ற ஒரு அசைக்கமுடியாத பெரும் நம்பிக்கையை இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்படுத்தியிருந்தது.

வடமராட்சியில் யுத்தம் வலுத்திருந்த வேளை முதலில் இந்திய அரசு இலங்கை அரசை எச்சரித்தது. இராணுவக் கெடுபிடியை நிறுத்தி தமிழர்களின் கோரிக்கைகளுக்கு ஒரு நியாயமான தீர்வினைக் காணுமாறு வலியுறுத்தியது. அதனை இலங்கை அரசு அசட்டை செய்தபோது 02.06.1987 அன்று மனிதாபிதமான உதவிகளாக உணவுப் பொருட்களை ஆயுதமற்ற ஒரு கப்பல் தொடரணி மூலம் கடல் மார்க்கமாக கொண்டு செல்ல முயன்றது ஆனால் இலங்கைக் கடற்படை அதனைத் தடுத்து நிறுத்தியது. அதன் பின்புதான் 04.06.1987 அன்று ஒபரேஷன் பூமாலை இடம்பெற்றது. உண்மையில் அந்த நடவடிக்கை ஒரு விமானத்திலல்ல ஐந்து விமானப்படையின் விமானங்களில் 25 தொன் நிறையுள்ள பொருட்களுடன் அதன் பாதுகாப்புக்காக சில குண்டுதாங்கி விமானங்களுமாக கூடச் சென்றன. அந்த மனிதாபிதமான நடவடிக்கை வெற்றியளித்தது. இதனைவிட இயக்கப் போராளிகள் சகலருக்கும் தனது வட பிராந்தியத்தில்

இந்தியாவே யுத்தப் பயிற்சியளித்திருந்தது. இந்திரா காந்தியால் ஆரம்பித்து வைத்த இலங்கை தமிழருக்கு உதவும் செயற்பாட்டை ராஜீவ் காந்தியும் தொடர்ந்து வந்தார். இலங்கையில் இணைப்பாட்சிக் (சமஷ்டி) கோரிக்கை 1949தில் ஆரம்பிக்கப்பட்டது. முப்பத்தியொரு (31) வருடங்களுக்கு பின்பு 1980தில் முதன்முறையாக மாவட்ட அபிவிருத்தி சபை என்ற ஒரு சிறு அமைப்பைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இலங்கை அரசியல் நகர்வு இருந்தது. ஆனால் புலிகளின் அதிரடித் தாக்குதலாலும் இந்திய அரசின் சமயோசித நடவடிக்கையினாலும் ஓரளவு சுயாட்சித் தன்மை கொண்ட மாகாண சபையென்ற அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவிருந்தது. இந்தியா செய்திருந்த பங்களிப்பு மிகவும் மகத்தானது. எவ்வாறாயினும் இயக்கப் போராளிகளை தனி நாடற்ற ஆனால் சுயாட்சிக்கு தேவையான ஓரளவிலான அதிகாரங்களைக் கொண்ட ஒரு அமைப்புக்கு ஒத்துக்கொள்ளவைக்க இந்தியா முனைப்புக் காட்டியது. அப்போது பிரதமராகவிருந்த ராஜீவ் காந்தி போராளிகளை சந்திக்க ஒரு கூட்டத்தை கூட்டினார். விடுதலைபுலிகள் வருகை தராத நிலைமையில் அவர்களையும் தன் வழிக்கு கொண்டுவருவதற்காக அந்நாட்களில் தமிழ் நாட்டின் முதலமைச்சராகவிருந்த எம்.ஜி.இராமசந்திரனின் உதவிதனை நாடியிருந்தார். எம்.ஜி.ஆர். எதைச்சொன்னாலும் பிரபாகரன் ஏற்றுக்கொள்ளுவார் என்பது எவருக்கும் தெரிந்த ஒரு விடயம். அக்காலகட்டத்தில் எம்.ஜி.ஆர். நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார். புலிகளுடன் கதைக்கக் கூடிய நிலைமையில் அவரில்லை. அவரை அமெரிக்காவுக்கு கொண்டு சென்றும் சிகிச்சை செய்தார்கள். ஆனால் 1987ம் ஆண்டு மார்கழி 24ந் திகதி அவர் காலமானார். புலிகள் அமைப்பு ராஜீவ் - ஜே.ஆர். ஏற்படுத்திய ஒப்பந்தத்தை ஒத்துக்கொள்ளவில்லை. இருந்தாலும் புதுடில்லியின் இறுக்கமான தீர்மானத்திற்குக் கட்டுப்பட்டு தமது சுடுகலங்களை இந்திய அமைதிப்படையிடம் ஒப்படைக்க இணங்கியிருந்தார்கள். இராஜதந்திர நகர்வுகளின் காரணமாக 29.07.1987 அன்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்தனாவுக்குமிடையே இணக்கம் ஏற்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதற்கு முன்னர் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அளிக்கப்பட்ட மரியாதை அணிவகுப்பில் பங்குபற்றிய ஒரு இராணுவ வீரரான விஜித ரோகண என்பவர் அணிவகுப்பை பார்வையிட்டு வந்துகொண்டிருந்த ராஜீவ் காந்தி மீது தான் வைத்திருந்த துப்பாக்கியால் தாக்க முற்பட்டார். அவ்வாறான சூழ்நிலையிலேயே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
ஒப்பந்தத்தின்படி இலங்கை அரசு மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்கம் செய்யவேண்டுமென்றும் அரச படைகளை மீளப்பெற்று முகாம்களுக்குள் முடக்கச்செய்ய வேண்டுமென்றும் தமிழ்ப் போராளிகள் தம்வசமுள்ள சுடுகலங்களை ஒப்படைக்க வேண்டுமென்றும் நாட்டில் சுமுக நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் அவற்றைக் ஒரு இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு வருகை தந்து கண்காணிக்கும் என்றும் இணங்கப்பட்டது.

**இந்திய இலங்கை ஒப்பந்தம்**

1. இலங்கையின் ஐக்கியம் இறைமை பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணிக்காக்க விரும்பியும்
2. இலங்கை சிங்களவர் தமிழர் முஸ்லீம்கள் பறங்கியர் ஆகியோரைக் கொண்ட பல்லின பன்மொழி பலமத சமூகங்கள் வாழும் நாடு என்பதனை உணர்ந்தும்

3. மிகக் கவனமாக பேணிப்பாதுகாக்க வேண்டிய தனித்தனிக் கலாச்சாரம் மொழி மத அடையாளங்களை ஒவ்வொரு இனமும் சமுகமும் கொண்டுள்ளன என்பதாலும்
4. வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுப் பூர்வமான வசப்பிடங்கள் என்பதையும் ஏற்று
5. இலங்கையின் ஐக்கியம் இறைமை பிரதேச ஒருமைப்பாடு ஆகிய அம்சங்களை பலப்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து சகல பிரஜைகளும் சமத்துவமாகவும் பாதுகாப்பாகவும் ஒற்றுமையாகவும் சுபீட்சத்துடன் தங்கள் அபிலாசைகளுடன் வாழவேண்டியது என ஏற்று ஒரு உடன்பாட்டுக்கு வருகின்றோம் என இரு தரப்பினராலும் கையொப்பமிடப்பட்டது. மேலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களாக:

1.இலங்கை அரசு அருகருகாமையிலுள்ள மாகாணங்களை ஒன்றிணைத்து ஒரு நிர்வாக அலகாக சேர்த்துக் கொள்ள கருதும் கீழ் விபரிக்கப்பட்டுள்ளவாறு வடக்கு கிழக்கு என்று அவற்றை பிரிக்கும் பட்சத்தில் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவது என்றும் அரசு முன்மொழிந்தது.
2. மாகாணசபைக்கான தேர்தல் நடத்தப்படும் திகதியிலிருந்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் திகதி வரையிலான காலப்பகுதியை இடைக்காலப் பகுதியென்றும் கருதப்படும். அவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் வரை வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரு மாகாண சபையை உள்ளடக்கியதாக ஒரு நிர்வாக அலகு கொண்டதாக இருக்கும். ஒரு ஆளுநர் ஒரு முதன்மந்திரி ஒரு மந்திரி சபை இருக்கவும் அது வழிசமைத்தது.
1988 டிசெம்பர் 31க்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் மக்கள் தீர்ப்பு மூலம் வடக்குடன் இணைந்து செயற்படுவதா அல்லது பிரிந்து தனித்து இயங்குவதா எனத் தீர்மானிக்கவும் வகை செய்யப்பட்டிருந்தது. இதனால் இலங்கை உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அரசியலமைப்பில் 13வது திருத்தத்தை மேற்கொண்டும் மாகாணசபைக் கட்டளைச் சட்டம் இயற்றப்படுமென்றும் அவற்றின்படி மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் அதிகாரத்தை கொடுப்பதும் வடகிழக்கிலுள்ள படையினரை திரும்பப் பெறுவதும் தமிழ் போராளி இயக்கங்கள் தங்கள் வசமுள்ள படைக்கலங்களை ஒப்படைத்தல் வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## 13வது அரசியலமைப்பு திருத்தம்

13வது திருத்தம் 14.11.1987 அன்று பராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதனுடன் மாகாண சபை இல. 42 /1987 என்ற கட்டளைச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது. இவைபற்றி பொழிப்பாகக் கூறுவதானால் சிங்களமும் தமிழும் தேசிய மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆங்கிலம் இணைப்பு மொழியாக ஆக்கப்பட்டது. 13வது திருத்த சட்டம் பற்றி விரிவாக பின்னர் ஆராயலாம்.

**(தொடரும்)**